## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.28/2024

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு பிப்ரவரி மாதம் 26 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராமசந்திர நாயுடு | மதம் | : இந்து |
| த/பெ | : ராமகிருஷ்ண நாயுடு | ஜாதி | : -- |
| வயது | : 82 | கிராமம் | : நெடும்பரம் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**26.02.2026**
**பி.வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்கின் 1ம் பிரதிவாதி நான் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி கோவர்தனன் எனக்கு என்ன உறவு என்றால் தம்பி ஆவார். சத்தியா, விஜயா, கௌசல்யா, யமுனா ஆகியோர் எனக்கு என்ன உறவு என்றால் மருமகள்கள் ஆவார்கள். வாதி கிருஷ்ணம நாயுடுவை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எப்படி தெரியும் என்றால் அவர் எனது ஊர்க்காரர் ஆவார். கிருஷ்ணம நாயுடு எனது உறவினரா என்றால் இல்லை. வழக்கு சொத்து மனையா கிராம நத்தமா என்றால் வீட்டு மனையாகும். தாவா சொத்து எந்த ஊரில் உள்ளது என்றால் நெடும்பரத்தில் உள்ளது. தாவா சொத்தின் புல எண் தெரியுமா என்றால் பழைய எண்.67 புதிய எண்.287/14 ஆகும்.

2. தாவா சொத்தின் கிழமேல் தென்வடல் என்ன அடி என்றால் கிழமேல் 78 அடி தென்வடல் 112 அடி ஆகும். தாவா சொத்தின் நான்கு எல்லை தெரியுமா என்றால் சுப்பா நாயுடு, அப்பா நாயுடு, சித்தப்பா நாயுடு வீடுகளுக்கு மேற்கே, சுப்பம்மா வீட்டிற்கு தெற்கே, முனுசாமி நாயுடு மனைக்கு கிழக்கே, பழைய ஆற்காடு செல்லும் சாலைக்கு வடக்கே ஆகும். ஆதியில் தாவா சொத்து யாருக்கு சொந்தம் என்றால் என் தாத்தா வெங்கடப்ப நாயுடுக்கு சொந்தம். அவருக்குபின் அவரது பிள்ளைகளான ராமா நாயுடு, கிருஷ்ணா நாயுடு,

செங்கல்வராய நாயுடு, சின்னய்யா என்ற நாராயணசாமி நாயுடு ஆகியோருக்கு சொந்தமானதாகும். நான் சொல்வது தவறு என்றாலும் வழக்கு சொத்துக்கள் ஆதியில் பிரமனேரி செங்கம்ம நாயுடுவின் மகன் வெங்கடப்ப நாயுடுக்கு சொந்தம் என்றால் இல்லை. பிரமனேரி செங்கம்ம நாயுடுவின் மகன் வெங்கடப்ப நாயுடு 29.10.1927ல் அச்சம்மாள் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றுள்ளார் என்றால் இல்லை.

(குறுக்கு விசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)